**தலைப்பு 118 – கமத்தொழில் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 118 – கமத்தொழில் அமைச்சின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 நவம்பர் 02 ஆம் திகதியன்று அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இனக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148,149,150,152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கேற்பப் பேணப்படுதல், தயாரிக்கப்படுதல், நியாயப்பூர்வமாக சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்ற கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல், நியாயப்பூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பவற்றிற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேணுதல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்கென ஒதுக்கப்பட்ட மொத்த நிகர நிதியேற்பாடு ரூபா 44,970.33 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டினது இறுதியளவில் அதில் ரூபா 34,745.67 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சிற்கென ஒதுக்கப்பட்ட மொத்த நிகர நிதியேற்பாட்டில் ரூபா 10,224.66 மில்லியன் அல்லது 22.74 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு, நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | நிகர நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டு வருவன | 39,847.22 | 32,497.06 | 7,350.16 | 18.45 |
| மூலதனம் | 5,123.11 | 2,248.61 | 2,874.50 | 56.11 |
| மொத்தம் | 44,970.33 | 34,745.67 | 10,224.66 | 22.74 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சிற்குரிய 11801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாகப் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதி கூடிய எல்லை | உள்ளவாறானது | அதி குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதி கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 32.00 | 29.62 | 19.00 | 20.02 | 75.00 | 54.77 |

## 2.3 கட்டு நிதிக் கணக்கு

அமைச்சின் கீழான 7002/0000/00/0325/0016/000 ஆம் இலக்கக் கட்டு நிதிக் கணக்கின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 181,300 ஆகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழான 04 வைப்புக் கணக்குகளின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 3.93 மில்லியன் கூட்டுத் தொகையாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா.மில்லியன் |
| 6000/0000/00/0002/0109/000 | 0.10 |
| 6000/0000/00/0013/0030/000 | 0.64 |
| 6000/0000/00/0016/0056/000 | 1.38 |
| 6000/0000/00/0018/0068/000 | 1.81 |
| **மொத்தம்** | **3.93** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

கமத்தொழில் அமைச்சின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு 1.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புகளுள் போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.1.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின்போது 06 செலவின விடயங்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிதியாகிய ரூபா 1.46 மில்லியன் பயன்படுத்தப்படாது முற்றாகவே சேமிப்புக்குள்ளானது.

(ii) மீண்டுவரும் 44 செலவின விடயங்களுக்கும் 31 மூலதனச் செலவின விடயங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட நிகர நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு, ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டில் 08 முதல் 99 சதவீதமாக அமைந்திருந்தது.

(iii) அமைச்சின் கீழான 03 நிறுவனங்களது கடமைகளை நிறைவேற்றுவதற்கு மொத்தமாக ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 105.00 மில்லியனாகும். எவ்வாறாயினும்,மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 73.78 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அந்த 03 நிறுவனங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் 19 முதல் 56 சதவீதம் வரை சேமிப்புக்குள்ளாகியிருந்தது.

(ஆ) நிதியேற்பாட்டிற்கும் அதிகமாக பொறுப்புகள் ஏற்படுதல்

இருபத்திரண்டு செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 19.83 மில்லியனுக்கான பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன.

### 3.2 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

#### 3.2.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கென அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு நிதியேற்பாடு செய்யப்படாததாலும் திட்டமிடப்படாத பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் காரணமாகவும் அநேக சந்தர்ப்பங்களில் செயல் நடவடிக்கைத் திட்டம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

#### 3.2.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்டம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சு மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டுமாயினும், அவ்வறிக்கை 2017 யூலை 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை.

### 3.3 சொத்து முகாமைத்துவம்

அமைச்சினது சொத்துக்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அமைச்சிற்குச் சொந்தமான 62 வாகனங்கள் முறைப்படி ஒப்படைக்கப்படாது 17 வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) பிற நிறுவனங்களது சொத்துக்களைப் பயன்படுத்தல்

அமைச்சு 13 பிற நிறுவனங்களது 45 வாகனங்களை முறைப்படி பொறுப்பேற்காது பயன்படுத்தியிருந்தது.

**3.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | |
| (i) நிதிப்பிரமாணம் 94(3) | மாண்புமிகு அமைச்சரின் வீட்டைப் பழுது பார்ப்பதற்கு மொத்த மதிப்பீட்டுக் கிரயத்திலும் அதிகமாக ஏற்பட்ட மேலதிக வேலைகளது பெறுமதி ரூபா 10,900,478 ஆகும். அம் மேலதிக வேலைகளுக்கான பொறுப்பு 2017 யூலை 31 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 210(i) | குறித்த தினத்திலோ அல்லது அதற்கு முன்னரோ விலைப்பட்டியலுக்கான பணம் செலுத்தப்பட வேண்டுமாயினும், அதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட்டதால் 2016 பெப்ரவரியில் ரூபா 25,926 தாமதக் கட்டணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | |
| (i) 11 ஆம் அத்தியாயத்தின் 13(3) ஆம் பிரிவு | நிரந்தரப் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கான நியமனம் அதி கூடியது 06 மாதங்களுக்கே வழங்கப்படலாமெனினும், உரச் செயலகத்தின் பணிப்பாளர் பதவியில் கமத்தொழில் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (நிர்வாகமும் நிதியும்) 2015 மே 05 தொடக்கம் 15 மாதங்களாக அப்பதவிக்குரிய கடமையை நிறைவேற்றியிருந்தார். |
| (ii) XV அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு | சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்காக பெறப்பட வேண்டிய ஏதாவது தகைமைகளைப் |

பெறுவதற்காகவன்றி தகுதிகாண் அடிப்படையிலான உத்தியோகத்தர்கள் கல்வி அல்லது பயிற்சிக்காக வெளிநாட்டு செயலமர்வுகளில் அல்லது பயிற்சிகளில் பங்குபற்றலாகாது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின்போது பதவியில் நிரந்தரமாக்கப்படாத தகுதிகாண் அடிப்படையிலான 02 உத்தியோகத்தர்களும் செயற்திட்ட உத்தியோகத்தர் ஒருவரும் வெளிநாட்டுச் செயலமர்விலும் பயிற்சியிலும் பங்குபற்றுவதற்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

**(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை**

2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைக்குள்ளான அமைச்சின் பதவியணியைச் சேர்ந்த 08 உத்தியோகத்தர்கள் சனிக்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் கைவிரல் அடையாள இயந்திரத்தில் தாம் வருவதையும் செல்வதையும் குறிப்பிடாது கடமையாற்றி ரூபா 138,646 மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாகப் பெற்றிருந்தனர்.

**(ஈ) சனாதிபதி செயலகச் சுற்றறிக்கை**

2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்கச் சுற்றறிக்கை

(i) மான்புமிகு அமைச்சர், மாண்புமிகு அரசாங்க அமைச்சர் மற்றும் அவர்களது அலுவலகப் பதவியனியினரின் பாவனைக்கென ஒதுக்கப்பட வேண்டிய அதி கூடிய எண்ணிக்கையை விட 09 வாகனங்கள் மேலதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தன.

(ii) சுற்றறிக்கைப் பிரகாரம் அமைச்சரது பாதுகாப்பு வாகனத்தின் சாரதியைத் தவிர, 02 சாரதிகளை பணியமர்த்தக் கூடியதாகவிருந்தபோதும், கமத்தொழில் அமைச்சருக்கென அதற்கு மேலதிகமாக 02 சாரதிகள் பணியிலமர்த்தப்பட்டிருந்ததுடன், அதன்பொருட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 839,197 சம்பளமாக வழங்கப்பட்டுமிருந்தது.

(iii) அமைச்சர் ஒருவரது பதவியணியைச் சேராத ஒருவருக்கு அமைச்சின் செயலாளரால் 2015 மார்ச் 09 முதல் வாகனமொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்நபர் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் பணிப்பாளராக பணியாற்றுபவர் ஆவார். பாவனைக்காக

அக் கம்பனியாலும் வாகனமொன்று அவரது உபயோகத்திற்காகப் பெறப்பட்டிருந்தது. இரு வாகனங்களுக்கும் 300 லீட்டர் எரிபொருளுக்கு ரூபா 30,000 எரிபொருள் படியைப் பெற்றிருந்ததுடன், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடமிருந்துவேறொரு வாகனமொன்றும் 2017 யூன் 22 தொடக்கம் பெறப்பட்டிருந்தது.

**3.5 செயலாற்றல்**

---

**3.5.1 உரச் செயலகம்**

---

1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரத்தை முறைப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் கீழ் உர இறக்குமதி, உற்பத்தி, தயாரிப்பு என்பவற்றிற்கான அதிகார அட்டையை வழங்கும் பணிக்கான நோக்குடன் கமத்தொழில் அமைச்சின் கீழ் உரச் செயலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதன் செயலாற்றலை மதிப்பாய்வு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) தற்போது ஏறக்குறைய 40 அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இலங்கையில் உர இறக்குமதியில் ஈடுபட்டுள்ளன. உர மாதிரியின் பகுப்பாய்வு அறிக்கைகளில் உள்ள சுயாதீனத் தன்மையை பாதுகாப்பதற்கும் நெடுங்காலத் தாமதத்தைத் தவிர்ப்பதற்குமான நோக்குடன் 2015 ஆம் ஆண்டில் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. மாதிரிகளது நிலைமையை பரிசீலித்ததன் பின்னர் அவை சந்தைக்கு வழங்கப்படும். 11 அரசாங்க கப்பல்கள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 296.79 மில்லியன் பெறுமதியான உரக் கையிருப்பு சம்பந்தமாக வழங்கப்பட்ட மாதிரிகளது நிலைமைச் சான்றிதழ்களை வழங்குவதற்கு 03 முதல் 06 மாதகால தாமதம் ஏற்பட்டது.

(ஆ) உர நிலைமைச் சான்றிதழைப் பெறுவது தாமதமாவதன் காரணமாக உரக் கையிருப்பு விற்பனை தாமதமாவதால் குறித்த கையிருப்பின் விற்பனைக்கென அளிக்கப்பட கடன் பெறும் கால எல்லை 180 முதல் 270 நாட்கள் வரை அதிகரிப்பதுடன் கலவை உரத்தை உற்பத்தி செய்வதற்கும் இயலாதிருந்தது. அதன் பெறுபேறாக களஞ்சிய இட வசதிகள் பாதிப்படைந்து உரக் கையிருப்புச் சேகரிப்பில் சிக்கல்கள் உருவாவதால் குறித்த உரத்திற்கான கோரிக்கைகளை ஈடுசெய்ய முடியாது போனது.

(இ) உர மாதிரிகள் இரகசிய சுட்டிலக்கத்தின்கீழ் ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதுடன், அச்சுட்டிலக்கத்தை வழங்குதல், குறித்த மாதிரியை ஆய்வுகூடத்திற்கு அனுப்புதல், சுட்டிலக்கத்தின் கீழ் பெறப்படும் அறிக்கைகளைத் திறந்து பார்த்தல், மீண்டும் நிராகரித்தல், உர விற்பனைக்கான அனுமதியைக் கம்பனிக்கு வழங்குதல் போன்ற பணிகள் ஒரு உத்தியோகத்தராலும் மேலதிகச் செயலாளராலும் (நிதி மற்றும் நிர்வாகம்) மேற்கொள்ளப்படுவதால் அதன் உள்ளகக் கட்டுப்பாடு நலிவடைந்திருந்தது. தெரிவுப் பரிசோதனைகளுக்கமைய, 07 சந்தர்ப்பங்களில் ஒரு ஆய்வுகூடத்தில் நிராகரிக்கப்பட்டிருந்த மாதிரி வேறொரு ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அவை தரம் மிக்கவை என சிபாரிசு வழங்கப்பட்டிருந்தது.

**3.5.2 உரக் கொள்வனவுக்கு மானியம் வழங்குதல்**

---

2016 ஏப்ரல் 07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், உரத்தை வழங்குவதற்குப் பதிலாக விவசாயிகளுக்குப் மானியம் வழங்குவற்கு தீர்மானம்

மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 மார்ச் 09 ஆந் திகதிய 2016 NFS/FCG (1) ஆம் இலக்க கமத்தொழில் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆரம்பத்தில் 20 நிதி நிறுவனங்களின் மூலம் இம் மானிய வசதியை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டு அது அமுலாக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் சிறுபோக மற்றும் பெரும்போக மற்றும் 2017 இன் சிறுபோகம் என்பவற்றிற்கு முறையே ரூபா.646,857,214, ரூபா 651,277,528, ரூபா 3,440,264,875 என 2017 யூலை 31 ஆந் திகதியளவில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) தவறாக மானியத்தை வழங்குதல்**

உரத்தைக் கொள்வனவு செய்வதற்கு மானியத்தை வழங்குகையில் தவறாக ரூபா 1237.90 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் வருமாறு,

| | விவசாயிகளது பிரதேசம் | போகம் | தவறான கொடுப்பனவு | எவ்வகைத் தவறு என்பது |
|---|---|---|---|---|
| | | | ரூபா. | |
| (i) | களுத்துறை மாவட்ட விவசாயிகளது பிரதேசம் | 2016 சிறுபோகம் | 2,411,500 | விவசாயிகள் அல்லாதோரது கணக்குகளில் செலவு வைக்கப்பட்டமை |
| (ii) | குருனாகலை மாவட்ட ராஜாங்கனை இடது கரை | 2017 சிறுபோகம் | 2,813,800 | பயிரிழப்பு மற்றும் உர மானிய வரம்பிற்கும் அதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டமை. |
| (iii) | தெரிவுப் பரிசோனைகளுக்குள்ளான விவசாயிகளது பிரதேசம் | 2016 சிறுபோகம் | 25,483,750 | அதி கூடிய மானியமாகிய ரூபா 25,000 க்கு அதிகமாகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை. |
| (iv) | தெரிவுப் பரிசோதனைகளுக்குள்ளான விவசாயிகளது பிரதேசம் | 2016 பெரும்போகம் | 74,367,500 | - மேற்படி - |
| (v) | தெரிவுப் பரிசோதனைகளுக்குள்ளான விவசாயிகளது பிரதேசம் | 2017 சிறுபோகம் | 1,095,000 | - மேற்படி - |
| (vi) | 16 மாவட்டங்களின் பரிசோதனைக்குள்ளான விவசாயிகளது பிரதேசம் | 2016 சிறுபோகம்1 | 1,131,723,030 | பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளுக்கு மானியம் வழங்கப்பட்டமை |
| | **மொத்தம்** | | **1,237,894,580** | |

(ஆ) **போகத்துக்குரிய காலப்பகுதி முடிவுற்றதன் பின்னரும் மானியம் வழங்கப்பட்டமை.**

2016 ஆம் ஆண்டின் சிறு போகத்திற்கு 2016 யூன் 30 ஆந் திகதியின் பின்னர் ரூபா 3,554.39 மில்லியன், 2016 பெரும் போகத்திற்கு 2017 பெப்ரவரி 15 ஆந் திகதியின் பின்னர் ரூபா 220.85 மில்லியன் என உற்பத்திக்கான மானியம் வழங்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு போகமும் முடிவடைவதற்கு முன்னர் அப் போகத்திற்கான மானியம் வழங்கப்பட வேண்டுமாயினும், குறித்த இரு போகங்களிலும் போக முடிவிலேயே ரூபா 3,775.24 மில்லியன் மானியமாக வழங்கப்பட்டமையால் பயனற்ற செலவினமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.5.3 கார்பனிக் உர உற்பத்தி, பயன்பாடு, ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்**

உணவுப் பாதுகாப்பு மற்றும் தேசிய முன்னேற்றத்திற்கான கார்பனிக் உர உற்பத்தி மற்றும் பாவனை என்பவற்றை பிரசித்தப்படுத்துவதை முன்னோடியாகக் கொண்டு 2008 முதல் 2016 வரை ரூபா 1287.06 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் ரூபா 100 மில்லியன் நிதியேற்பாட்டில் ரூபா 76.66 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டின் கார்பனிக் உர உற்பத்தி 70.7 மெற்றிக் தொன் ஆகும். 2008 முதல் மீளாய்வாண்டு வரை உற்பத்தி 582 மெற்றிக் தொன் ஆகவிருந்தது. அதற்கமைய, ஒரு ஆண்டிற்கான சராசரி உற்பத்தி 64 மெற்றிக் தொன் எனும் குறைந்த உற்பத்தியாகவிருந்தது.

(ஆ) கார்பனிக் உர நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த நோக்கத்திற்கமைய திட்டமிட்டவாறு கார்பனிக் உர உற்பத்திக் கிராமத்தை அமைத்தல், பாடசாலைகளை அண்மித்தவாறு கொம்போஸ்ட் உற்பத்திக் கூறுகளை அமைத்தல், கமநல சேவைகள் நிலையத்துடன் இணைந்த கொம்போஸ்ட் மாதிரிக் கூடங்களை அமைத்தல், கொம்போஸ்ட்டுடன் இணைந்த ஆராய்ச்சிகள், இலைகள் மூலமான உரப் பயிர்செய்கையை அமைத்தல் போன்ற பணிகள் 2012 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) கடந்த 09 ஆண்டுகளின்போதும் பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு மரக்கறி வகை மாதிரிப் பண்ணைகள் என 2014 ஆம் ஆண்டின்போது அமைக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை 594 ஆகும். அதனையடுத்து, மாதிரிப் பண்ணைகள் எதுவும் அமைக்கப்பட்டிருக்கவில்லை. கைவிடப்பட்ட வயல் விதைப்புகளும் நடைபெற்றிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின்போது இந் நிகழ்ச்சதிட்டத்தின் கீழ் கார்பனிக் உரத்தை வணிக ரீதியில் அமைப்பதற்கான குறைந்த வட்டி வீதத்தில் கடனை வழங்குவதற்கு அமைச்சு சாரலங்கா கடன் திட்டத்தை அமுலாக்கியிருந்தது. அதற்கென ரூபா 50.00 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் விவசாயிகளது வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு ரூபா 32.00 மில்லியன் கடனாக வழங்கப்பட்டிருந்தது. எனினும், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது கம்பஹா மாவட்டத்தைத் தவிர, ஏனைய மாவட்டங்களில் ஒட்டுமொத்த கார்பனிக் உர உற்பத்தியினது மட்டம் திருப்திகரமாக அமைந்திருக்கவில்லை. விபரம் வருமாறு

| மாவட்டம் | இடம் | கடன் எண்ணிக்கை | பெறப்பட்ட கடன் | அவதானிப்புகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| அனுராதபுரம் | கட்டியாவ | 04 | 2,000,000 | நான்கு கடனாளிகள் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின்போது 2016 யூலை 25 ஆந் திகதியளவில் 2 கடனாளிகள் கடனுக்காக பணிகள் எவற்றிலும் ஈடுபட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஒரு கடனாளி அரசாங்க உத்தியோகத்தர் ஆவார். ஏனைய 2 கடனாளிகளும் போதிளயவு கார்பனிக் உரத்தை உற்பத்தி செய்திருக்கவில்லை. |
| பதுளை | ஹல்தும்முல்ல | 02 | 500,000 | கடனைப் பெற்றவர் அதனை ரூபா 200,000 கடனை செலுத்துவதற்குப் பயன்படுத்தியிருந்தார். |
| பதுளை | பண்டாரவளை | 02 | 500,000 | கடனாளி ஒருவர் ரூபா 100,000 பெறுமதியான காணியைத் துண்டு கோரும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்திருந்தார் அவ்வாறே, மாட்டுத் தொழுவம் ஒன்றை அமைப்பதிலும் நீர்த் தாங்கியை அமைப்பதிலும் ஈடுபட்டபோதும், கார்பனிக் உரத்தை உற்பத்தி செய்திருக்கவில்லை. |

### 3.5.4 நாடளாவிய விவசாய வாரம்

2016 ஒக்டோபர் 05 முதல் 2016 ஒக்டோபர் 16 வரை நடைபெற்ற கமத்தொழில் வாரத்திற்கு ரூபா 60.05 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமையில் கமத்தொழில் திணைக்களமும் கமத்தொழில் அமைச்சும் அதனோடிணைந்த 3 ஏனைய நிறுவனங்களும் இந் நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டன. அதற்கமைய, கமநல சேவைகள் திணைக்களம் பாலூட்டும் தாய்மார்களின் பொருட்டு தானம் வழங்குதல், விவசாயிகளது சம்மேளனம், கடவர பெஹர மற்றும் மாவட்ட மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிகு ரூபா 25.60 மில்லியனைச் செலவிட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது பின்வரும் குறைபாடுகள் புலனாகின.

(அ) ஊடகப் பொறுப்பு நடவடிக்கைகள் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களது தலைமையில் மேற்கொள்ளப்பட்டதால் உள்ளகச் செவ்வை நலிவடைந்திருந்தது.

(ஆ) 2015 மார்ச் 31 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையில் பிரகாரம் பணம் முறையற்றவாறு பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கும் பல்வேறு பிரசார நடவடிக்கைகளுக்கு அதனைச் செலவழிப்பதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது பொறுப்பாக இருந்த போதும், அமைச்சு ஊடகச் செயற்பாடுகளுக்கு செலவழித்திருந்த தொகை ரூபா 16.78 மில்லியனாகும். அது மொத்த நிகழ்ச்சித்திட்டச் செலவினத்தின் 28 சதவீதமாவதுடன், 2016 ஒக்டோபர் 12 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக குறித்த ஊடக விடயங்களுக்கு நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டுமிருந்தது.

### 3.5.5 பதிவு செய்யப்பட்ட விதை நெல்லைப் பயன்படுத்துவதன் மூலம் தமக்குத் தேவையான உற்பத்தியை மேற்கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டம்.

மேலும் மெருகூட்டப்பட்ட வகையிலான பதிவு செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் விதை நெல்லை 160,000 விவசாயிகளுக்கும் 20,000 விவசாயிகளுக்கு ஒரு விவசாயிக்கு 250 கிறாம் பராம்பரிய நெல்லையும் 180,000 விவசாயிகளுக்கு இலவசமாக 4,120,000 பெரசூட் தட்டுக்களையும் வழங்குவதற்கு ரூபா 18.67 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் புலனாகின.

(அ) அமைச்சு 1,000,000 பெரசூட் தட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 12.00 மில்லியன் மதிப்பீட்டிலான அதிகளவு பெறுமதியான பொருட் கொள்வனவுக்கு அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டலின் பிரகாரம் தேசிய போட்டியுடனான கூறு விலைக் கோரலை பயன்படுத்தியிருக்க வேண்டுமாயினும், அதற்கு முரணாக சந்தை விலைக் கோரல் முறைமையை பயன்படுத்தியிருந்தது.

(ஆ) நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் விவசாயிகள் பயிர்ச்செய்கையை ஆரம்பித்திருந்தமை, இந்த விசேட வகையான நெல்லும், பெரசூட் தட்டும் பெருமளவில் ஒரே தடவையில் வழங்கப்படுவதில் உள்ள இடர்கள், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களிடமிருந்து விதை நெல் பெக்கட்டுக்களுக்கான தேவையும் தகுதியுடைய விவசாயிகளது தகவல்களை உள்ளடக்கிய மாதிரிப்படிவம் பெறப்படுவதிலான தாமதம் போன்ற காரணங்களால் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் 35 சதவீதம் மாத்திரமே.

### 3.5.6 சிறிய குளங்கள் மற்றும் நீரோடைகளைப் புனரமைக்கும் நிகழ்ச்சித்திட்டம்

கைவிடப்பட்ட நிலையில் உள்ள குளங்களைப் புனரமைத்து விவசாயிகளுக்குத் தேவையான நீரைத் தொடர்ந்து வழங்குவதற்காக குளக்கட்டுக்களைப் புனரமைத்து நீர்ப் பிரவாக முறைமை, நீரோடை என்பவற்றை முன்னேற்றம்மடையச் செய்யும் நோக்குடன் மீளாய்வாண்டின்போது ரூபா 2,000 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 1,971 மில்லியன் பயன்படுத்தப்பட்டுமிருந்தது. இந் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அனுராதபுரம், கம்பஹா,கண்டி, களுத்துறை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒப்பந்தத்தை வழங்குவதற்கு இடைத்தரகராக விவசாய அமைப்பைப் பயன்படுத்துவது மூல நோக்கமாக இருந்ததுடன் விவசாய அமைப்புகளின் பெரும்பாலான அங்கத்தவர்களிடையே செயற்திட்டம் தொடர்பான அறிவோ அல்லது ஊக்கமோ காணப்படவில்லை. பரீசீலிக்கப்பட்ட 3 மாவட்டங்களில் ரூபா 14,673,434 பெறுமதியுடைய செயற்திட்டங்களை விவசாய அமைப்புகள் பொறுப்பேற்று அவற்றை வெளியிலிருந்து பெறப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மூலமாக நிறைவேற்றியிருந்தன.

(ஆ) 2016 சனவரி 07 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்கக் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையினது (iv) ஆம் பந்தியின் பிரகாரமும் 2016 செப்டெம்பர் 08 ஆந் திகதிய MNPEA 03/2016 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினது செயலாளரது சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் இச் செயற்திட்டம் உப ஒப்பந்தகாரர்களினூடாக மேற்கொள்ளப்படுவது தவிர்க்கப்பட வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அவ்வாறாகச் செயற்பட்ட விவசாய அமைப்புகளைத் தவறிழைத்த நிரலில் இடுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) மேற்படி திருத்தப்பட்ட சுற்றறிக்கையின் 30 ஆம் பந்தியின் பிரகாரம் விவசாய அமைப்புகளுக்கு செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் ஆளணி, உபகரணங்கள், நிதிச் சுற்றோட்டம் என்பனவற்றை சங்கங்கள் கொண்டிருந்தனவா என்பது உறுதி செய்யப்படவில்லை. பரீசீலிக்கப்பட்ட பெருமளவிலான விவசாய அமைப்புகளது வங்கிக் கணக்குகளில் ரூபா 200,000 க்கும் குறைவான மீதியே இருந்தன.

(ஈ) நான்கு மாவட்டச் செயற்திட்டங்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது பின்வரும் குறைபாடுகள் புலனாகின.

(i) கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொட பிரதேச செயலகப் பிரிவில் 2016 யூன் 26 ஆந் திகதியன்று ரூபா 2,049,685 செலவில் நிர்மாணிக்கப்பட்ட

குளக்கட்டு உடைந்தமையால் அதனைப் பயன்படுத்த முடியாதிருந்தது. அதனைச் சூழவுள்ள பயிர்ச் செய்கை ஏறக்குறைய 2 அல்லது 3 அடி நீரினால் நிறைந்திருந்தது.

(ii) அனுராதபுரம் மாவட்டத்தில் இலுப்பன்கடவல தொடக்கம் இந்திகஸ்பொத்தான வரையான கமத்தொழில் வீதியும் இஹல இந்திகஸ்பொத்தான பஹலதலாவ கமத்தொழில் வீதிக்கும் முறையே ரூபா 1,527,215 மற்றும் ரூபா 1,032,924 எனச் செலவிடப்பட்டிருந்தன. அக்கமத்தொழில் வீதிகளைத் திட்டமிட்டவாறு நிர்மாணிக்காததால் இரு பக்க மதில்களும் பாதிப்படையக் கூடியவாறிருந்தன.

(iii) பரீசீலனைக்குள்ளான 4 மாவட்டங்களினது கமத்தொழில் வீதிகளும் குறிக்கப்பட்டவாறு நிர்மாணிக்கப்படாததுடன் நீரோடை முறையாகப் பராமரிக்கபட்டமையால் புதர்களால் சூழப்பட்டுமிருந்தது.

(iv) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 22(i) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இலங்கையின் சகல மாவட்டங்களிலும் நிர்வாக மொழி சிங்கள மொழியாக இருக்க வேண்டுமாயினும், இச் செயற்திட்டங்களுக்குரிய சகல மதிப்பீடுகளும் ஆங்கில மொழியில் மாத்திரமே இருந்தன. விவசாய அமைப்புகள் ஒப்பந்தகாரக்களாகச் செயற்படும் இச் செயற்திட்டங்களது மதிப்பீடு சிங்கள மொழியில் தயாரிக்கப்படுவது முக்கயிமானபோதும் அவ்வாறு நடைபெறவில்லை.

(உ) 2016 சனவரி 07 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளரது சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட நியமங்களுக்கமைய செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமாயினும், இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான செயற்திட்டங்கள் அவ்வாறு அமையவில்லை.

(ஊ) 2016 சனவரி 07 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளரது சுற்றறிக்கையினது (V) ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திட்டத் தொடர் நடவடிக்கையும் பராமரிப்பு நடவடிக்கைகளும் போதியளவு நிறைவேற்றப்படவில்லை.

### 3.5.7 கம்தொர விசேட நிகழ்ச்சித்திட்டம்

2016 – 2018 உணவு உற்பத்தி விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நெல், மேலதிகப் பயிர் வகைகள், மரக்கறி வகை மற்றும் பழங்களது பயிர்ச்செய்கை, கார்பனிக் உர உற்பத்திகள் மற்றும் ஏனைய விசேட கமத்தொழில் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கும் கமத்தொழில் செயற்திட்டங்களை அமுலாக்கும் உத்தியோகத்தர்களது செயல் முறை அறிவு, தொழில் நுட்ப அறிவு என்பவற்றை அதிகரிப்பதற்கும் தீவடங்கிலுமாக 2016 ஆகஸ்ட் 16 வரையான காலப்பகுதியின்போது ‘‘கம்தொர’’எனும் பெயரிலான விசேட நிகழ்ச்சித்திட்டம் ஒன்று கமநல சேவைகள் திணைக்களத்தினூடாக அமுலாக்கப்பட்டிருந்தது. இதன் கீழ் 2016 ஆம் ஆண்டின்போது 15 பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன், அதற்கென ரூபா 58,421,236 செலவிடப்பட்டுமிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படாததுடன், அமைச்சின் செயற் திட்டத்திலும் அது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்கென நிதியேற்பாடு கோரப்பட்டிருந்தும் அங்கீகரிக்கப்படுவதற்கான விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமையால் அதற்குத் திறைசேரியின் அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதியேற்பாடு பெறப்படாமையால் உர மானியத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட செலவின விடயத்திலிருந்து ரூபா 62 மில்லியன் வயர்மன்ட் விதி முறையின் கீழ் மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக உர மானிய நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான நிதியேற்பாடு குறைவடைந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 19,788,418 பொறுப்புகள் உருவாக ஏதுவானது.

(இ) அமப/08/2253/338/043 இலக்க மற்றும் அமப/10/1682/407/04 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானங்களின் பிரகாரம் அரச நிறுவனங்களது பிரசாரங்களை செலசினே நிறுவனத்தின் மூலம் செய்ய வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தும், தேசிய உணவு மேம்பாட்டு அமைப்பானது தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்ற ரூபா 2,543,201 மூலம் பிரசாரத்தை நிறைவேற்றியிருந்தது.

(ஈ) நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்திற்கமைய கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் கமத்தொழில் அமைச்சு என்பவற்றின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி தரவு முறைமை ஒன்றைத் தயாரிக்கவில்லை.

(உ) இந்த நிகழ்ச்சித்திட்டத்தை மேற்பார்வை செய்வதற்கு அமைச்சின் உத்தியோகத்தர்கள் அடங்கலாக கமநல சேவைகள் திணைக்களத்தினதும் கமத்தொழில் திணைக்களத்தினதும் நிறைவேற்றுதர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தபோதும், அவ்வாறான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டதை உறுதி செய்வதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவிலலை.

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

கமத்தொழில் திணைக்களத்தின் பொறியியல் பிரிவின் மூலம் குண்டசாலையில் நிர்மாணிக்கப்பட்ட மழைத் தடுப்புக் கவசங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின்போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உள்ளூர் பெரிய வெங்காய விதை உற்பத்தி நிகழ்ச்சிசத்திட்டத்திற்கென 15 மழைத் தடுப்புக் கவசங்களை நிர்மாணிக்கும் பணி விதை மற்றும் மரநடுகை பணிப்பாளரால் கமத்தொழில் திணைக்களத்தின் பிரதான பொறியியலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 20 மில்லியனாகும். இது சம்பந்தமாக நேரடிப் பரீசீலனைகளை மேற்கொள்ளாது பொதுவாக குறித்த இடத்தில் ஒரு மழைத்தடுப்புக் கவசத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,335,879 கிரயத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மழைத்தடுப்புக் கவசங்களை நிர்மாணிப்பதற்கு 23 நிறுவனங்களிடமிருந்து கூறு விலைகள் கோரப்பட்டிருந்ததுடன், கூறு விலைகளைக் கோரும் காலம் 7 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பொருட் கொள்வனவு நடவடிக்கைகளை குறுகிய காலத்தில் நிறைவேற்றியிருந்ததுடன், அதற்கமைய கூறு விலைக்கோரலுக்கு 7 நாட்கள் வழங்கப்பட்டதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டிருந்தபோதும், ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் 448 நாட்கள் தாமதம் ஏற்பட்டிருந்தது.

**3.7 இனங்காணப்பட்ட இழப்புகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கமத்தொழில் அமைச்சிற்குக் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடம்

2015 செப்டெம்பர் 27 ஆந் திகதிய 15/130/702/007 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தின் தொழிற்பாடு குழு விதி முறையைச் சீர்திருத்தி மேலதிக அலுவலகத்திற்குத் தேவைப்படும் இட வசதியை கமதொழில்

அமைச்சில் அமைந்துள்ள கமநல கட்டிடத்தைப் பயன்படுத்துவன் மூலம் பெறலாம் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்பொருட்டு ராஜகிரியவில் 288 ஆம் இலக்க இடத்தில் 9 மாடிக் கட்டிடம் குத்தகைக்கும் பெறப்பட்டிருந்தது. அக்கொடுக்கல் வாங்கல்களது பரீசீலனையின்போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், தேவையான சதுர அடி அளவிலான அலுவலக வசதியை செத்சிரிபாய கட்டிடத்தில் பெற்றிருக்க முடியுமாயினும், இட வசதி போதுமானதுமானதாக அமையவில்லை எனக் குறிப்பிட்டு தேவையான சதுர அடி இட வசதிக்கு மேலதிகமாக 36,500 சதுர அடியிலும் கூடிய மேற்படி 09 மாடிக் கட்டிடம் வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. அக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு முன்னர் கட்டிடத்தின் திட்டத்தை அங்கீகரிக்கும் தறுணத்தில், நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேல் மாகாணப் பணிப்பாளரால் மாடிகளின் எண்ணிக்கையை 07 ஆக மட்டுப்படுத்தும் திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கு முரணாக, 09 மாடியுடனான இக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 835(2)(உ) க்கமைய குத்தகைக் காலம் அதிகளவு 3 ஆண்டுகளுக்கே அமைய வேண்டுமாயினும், குத்தகை வழங்கியவரது தேவைக்கேற்ப அது 05 ஆண்டுகளாகக் குறிப்பிடப்பட்டு குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், 03 ஆண்டுகளின் பின்னர் குத்தகை வாடகையை 15 சதவீதத்தால் அதிகரிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டிருந்தது. குத்தகை வழங்கியவரது கோரிக்கையின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவிற்கான நிபந்தனையின் பிரகாரம் 2 ஆண்டுகள் குத்தகைப் பணத்தை ஒரே தடவையில் வழங்குவதும் மூன்றாம், நான்காம் ஆண்டுகளின்போது அதனை ஈடுசெய்வதற்குமான நிபந்தனையும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், பிரதான விலை மதிப்பீட்டாளரால் அக்கட்டிடத்தின் மாதாந்த வாடகை ரூபா 13.5 மில்லியன் என மதிப்பீட்டிருந்தபோதும், அதற்கு முரணாக மாதாந்தம் ரூபா 21 மில்லியன் வாடகையைச் செலுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டிருந்தது.

(iii) 2016 ஏப்ரல் 07 ஆந் திகதிய அரசாங்க கணக்குக் குழுக் கூட்டத்தின் போது அக் குழுவின் அங்கத்தவர்கள் கட்டிடத்தை வாடகைக்கப் பெறுவது சம்பந்தமான தீர்மானம் தொடர்பாகச் சர்ச்சைக்குரியவாறு குறிப்பிட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமைக்கான கேள்விக்குரிய விடயங்கள் தொடர்பாக அரசாங்கக் கணக்குக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவுமில்லை. மேலும், இக் கொடுக்கல் வாங்கல்களுக்கு பிரதமரது செயலாளரினதும் சட்ட மா அதிபரினதும் ஆலோசனைப் பிரகாரம் நடவடிக்கைககளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்திருந்தபோதும், அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(iv) மேலதிகமாகப் பெறப்பட்ட 36,500 சதுர அடியுடைய கமத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் வாடகைக்குப் பெறப்பட்ட கமத்தொழில் காப்புறுதிச் சபையை இங்கு நிறுவுதற்கு எண்ணியுள்ளதாக அமைச்சின் செயலாளர் அரசாங்கக் கணக்குக் குழுவிற்கு அறிவித்திருந்தபோதும், அதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவில்லை.

(v) 2016 ஏப்ரல் தொடக்கம் 2017 யூலை வரை இதன் பொருட்டு ரூபா 315.00 மில்லியன் வாடகையும் பெறுமதி சேர்வரி (VAT) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) ரூபா 53.64 மில்லியனுடன் முற்பணமாக ரூபா 504.00 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 872.64 மில்லியன் கூட்டுத் தொகையும் 2017 யூலை 31 ஆந் திகதியளவில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(vi) கட்டிடத்தை 15 மாதங்களாகப் பயன்படுத்தியிராதபோதும், அக் காலப்பகுதிக்கு சேவைக் கட்டணமாக மாதாந்தம் ரூபா 6.18 மில்லியன் வீதப்படி ரூபா 92.70 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(vii) இக் கட்டிடத்தைத் தெரிவு செய்யும்போது அமைச்சிற்குரிய வாகனங்களையும் நாளாந்தம் பல்வேறு கடமைகளுக்கென பிரதேச அலுவலகங்களிலிருந்து வருகை தரும் வாகனங்களையும் நிறுத்தி வைப்பதற்கான இட வசதி நிலவ வேண்டும் என்பது கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(viii) அவ்வாறே, இக்ககட்டித்தை அலுவலகக் கட்டிடத்தொகுதியாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான அறைகளை வெவ்வேறாக்குதல், கம்பள விரிப்பு மற்றும் தகவல் முறைமையை ஸ்தாபித்தல் என்பவற்றிற்கு 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய அமப/16/1491/728/011-11 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா. 402.6 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 நவெம்பர் மாதமளவில் ரூபா 147.9 மில்லியன் செலவிடப்பட்டுமிருந்தது.

(ix) உடன்படிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களின்போது நிலவிய மின்சார இணைப்பு முறைமை போதியளவு சுற்றோறட்டத்தைக் கொண்டிராததால் மீண்டும் அது அமைக்கப்பட்டிருந்ததுடன், கட்டிடத்தைக் குத்தகைக்குப் பெறுவதற்கு முன்னர் சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொண்டிராமையால் மேற்படி சிக்கல்கள் உருவாகியிருந்தன.

(ஆ) வானூர்தி பிரவேசச் சீட்டுக்களுக்கு மேலதிக கட்டணத்தைக் கொடுப்பனவு செய்தல்

கமத்தொழில் அமைச்சரும் அமைச்சரது ஆலோசகரும் 2016 யூன் 07 தொடக்கம் யூன் 11 வரையான காலப்பகுதியின்போது பெல்றூஸ் நாட்டில் நடைபெற்ற கமத்தொழில் கண்காட்சியில் கலந்து கொள்வதற்குப் பெறப்பட்ட வானூர்திப் பிரவேசச் சீட்டுக்களின் பயண நாட்கள் 02 சந்தர்ப்பங்களில் மாற்றஞ் செய்யப்பட்டமையால் ரூபா 129,055 மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டியயேற்ப்பட்டது.

### 3.8 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

அமைச்சிற்குச் சொந்தமான 11 பயன்படுத்தப்பட முடியாத வாகனங்கள் 10 ஆண்டுகளாக இருந்ததுடன் அவற்றுள் 08 வாகனங்களை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுமிருந்தது. எனினும், அவ்வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவால் வாகனங்களது சந்தைக் கோரிக்கை மற்றும் உதிரிப்பாகங்களைப் பழுதுபார்ப்பதற்கான கிரயம் தொடர்பாகக் கவனம் செலுத்தாது வாகனங்களது தற்போதைய பெறுமதிக்கும் அதிகமாக மதிப்பீடு செய்யப்பட்டதால் 05 வாகனங்களது விற்பனை மூலம் பெறக்கூடியதாகவிருந்த ரூபா 5,515,638 கூட்டுத்தொகை இழப்பிற்குள்ளானது.

### 3.9 பயன்படுத்தப்படாதிருக்கும் சொத்துக்களது பயன்பாடு

உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 111.3 மில்லியன் பெறுமதியுடைய 10 வகையான 690 இயந்திர சாதனங்கள் 2017 ஏப்ரல் 08 ஆந் திகதி அனுராதபுரம் சல்காது விளையாட்டு மைதானத்தில் விவசாய அமைப்புகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பெற்ற நபர்களும் அமைப்புகளும் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டன எனும் தகவல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், இந்த இயந்திர சாதனங்களில் 40 தொடர்ந்தும் அனுராதபுரம் விவசாயப் பண்ணை இயந்திரப் பயிற்சி நிலையத்தில் 2017 யூலை 25 ஆந் திகதியளவிலும் பயனற்றவாறு இருந்தன.

**3.10 வாகனப் பாவனை**

-----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டில் அமைச்சினது வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு நியமிக்கப்பட்ட மதிப்பீட்டுச் சபையால் 02 வாகனங்களது இயந்திரங்களின் இலக்கங்கள் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களுடன் பொருந்தியிராததால் அவை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மற்றுமொரு வாகனத்தின் பதிவை இரத்துச் செய்வதற்குப் போதிய தகவல்கள் இல்லாததால் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்ய முடியாதிருந்தது. 2017 யூலை 31 ஆந் திகதியளவிலும் அவ்வாகனங்கள் பயனற்றவாறு இருந்தன.

(ஆ) அமைச்சிற்குச் சொந்தமான 12 வாகனங்கள் 01 முதல் 04 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவுமில்லை. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட நேரடிப் பரிசோதனையின்போது அவ்வாகனங்கள் அமைச்சினது வளாகத்தில் வெயிலிலும் மழையிலும் பாதிப்புக்குள்ளாகியவாறும் துருப்பிடித்தவாறும் இருப்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 ஏப்ரல் 11 ஆற் திகதி அனுராதபுரம் பிரதேசத்தில் அமைச்சினது கெப் வண்டி ஒன்று இழுத்துச் செல்லப்படுகையில் விபத்துக்குள்ளாகியிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விபத்து சம்பந்தமாக 104 ஆம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) இவ் விபத்து சம்பந்தமாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட மோட்டார் வாகனத் தொழில்நுட்ப அறிக்கையின் பிரகாரம் வாகனத்தின் கைப்பிடியும் சுக்கானும் சிறந்த நிலையில் உள்ளதாகவும் கிளட்ச்சானது இவ்விபத்தில் சம்பந்தப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, விபத்து நடைபெற்ற சந்தர்ப்பத்தில் கைப்பிடி சிறந்தவாறு இருக்கையில் சாரதி தமது ஆசனத்தில் இருந்தவாறு விபத்தைத் தவிர்ப்பதற்கு முனையாததாலும் முறைப்படி அதனை இழுத்துச் செல்லாததாலும் கவனமின்மை காரணமாகவே விபத்து ஏற்பட்டுள்ளதாக நிரூபணமாகியபோதும் அமைச்சு இது தொடர்பாக பரிசீலினை மேற்கொள்ளவில்லை.

(iii) செஸி பாதிக்கப்பட்டுள்ளதால் இவ்வாகனத்தைப் பழுது பார்க்க முடியாதுள்ளது என முகவர் நிலையம் அறிவித்திருந்தது. இது சம்பந்தமாக 104(4) ஆம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசீலனைக்கென நியமிக்கப்பட்ட குழுவானது இது சம்பந்தமாகப் பொறுப்பானவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுக்காற்று நடவடிக்கைகளைக் குறிப்பிட்டிருக்கவில்லை என அமைச்சின் செயலாளர் கணக்காய்வுக்குத் தெரிவித்திருந்தார்.

(ஈ) அமைச்சுக்குச் சொந்தமான மற்றுமொரு வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து சம்பந்தமாக 104(4) ஆம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரமான பரிசீலினை 2017 யூன் 30 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படவில்லை.

## 3.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | மிகையாகவுள்ள எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 138 | 105 | 33 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 06 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,359 | 1,079 | 280 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 156 | 127 | 29 | - |
| (v) | ஏனையவை (சமயாசமய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 09 | - | 09 |
| | **மொத்தம்** | **1,664** | **1,326** | **347** | **09** |